


கொண்டை, அழகு. மயில், மசூதி, தேவாலயம், கோயில் எங்கே அமைந்திருந்தாலும்.

ஸ்பானிய மொழியில் கொண்டையை க்யூபுலா (Cupula) என்பார்கள். இடிஏ.வுக்கு இந்தப் பெயர் மிகவும் பிடித்துவிட்டது. அவர்கள் கொண்டையைப் பார்த்தவிதம் வேறு. உச்சி. எல்லாவற்றுக்கும் மேல். தலைசாய மாட்டோம் என்னும் கம்பீரம். பார்ப்பவர்களை ஈர்க்கும் வசீகரம். கொண்டையை அவர்கள் இப்படித்தான் பார்த்தார்கள், புரிந்து கொண்டார்கள்.

தனது இயக்கத்தின் தலைமையை இடிஏ. இப்படித்தான் அழைத்துக்கொள்கிறது. Cupula Militar. (என்றால் ராணுவக் கொண்டை). இடிஏ. என்னும் இயக்கத்தின் மூளை க்யூபுலா. தனி நபர் தலைமை கூடாது என்பது கொள்கை. எனவே, ஒரு குழுவை அமர்த்தி, அவர்கள் சொல்பேச்சு கேட்டு கையைக் கட்டிக்கொண்டு இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

க்யூபுலா சொல்வதுதான் சட்டம், வேதவாக்கு, அருள்வாக்கு எல்லாமும். க்யூபுலா தலைமைக்கு நிச்சயம் கீழ்ப்படிந்தே ஆகவேண்டும். எதிர்க் கருத்து, மாற்றுக் கருத்து, வெள்ளைப் பூண்டு கருத்து எதற்கும் இடமில்லை. மார்க்கெடிங் ஆட்களுக்குக் கொடுக்கப்படுவதைப் போன்ற டார்கெட், இடிஏ.வின் ஒவ்வொரு வீரருக்கும் அளிக்கப்படும். வரும் புதனுக்குள் மாட்ரிட் பூங்காவிலுள்ள பச்சை கலர் பெஞ்சுக்குக் கீழே குண்டு வைத்துவிட்டு வா. வியாழக்கிழமை வைத்தாலும் அந்த குண்டு வெடிக்கத்தான் போகிறது. பச்சைக்குப் பதில் சிவப்பு பெஞ்சின் கீழ் வைத்தாலும் வெடிக்கும். ஆனால், கொடுக்கப்பட்ட கட்டளையை, கொடுக்கப்பட்டதைப் போலவே செய்து முடித்தால்தான் க்யூபுலாவுக்குப் பிடிக்கும். இல்லையென்றால், பிய்த்துக் கடாசிவிடுவார்கள்.

க்யூபுலாவுக்குக் கீழே சிறு சிறு குழுக்கள் செயல்படுகின்றன. அவர்களை, Talde commandos என்று அழைக்கிறார்கள். ஏ.டி.எம். சென்டர் போல் நகர வாரியாக இவர்கள் பிரிந்து படர்ந்திருப்பார்கள். இருபத்து நான்கு மணி நேர சேவை. பெரும்பாலான பணிகள் அகால நேரத்தில் மட்டுமே அளிக்கப்படும். மாட்ரிட் இரண்டாவது சாலையில் உள்ள கமாண்டோ பிரிவைப் பற்றி மூன்றாவது சாலையில் உள்ள கமாண்டோ பிரிவுக்குத் தெரியாது. கமாண்டோ-கொண்டை இருவருக்குமான அன்னியோன்யம் அப்படி.

தம்முடைய கமாண்டோக்களை மூன்று பிரிவுகளாக வகைப்படுத்தி வைத்திருக்கிறது இடிஏ. இதற்கு முன்னால் எந்தவிதமான தப்புத்தண்டாவும் செய்யாதவர்கள் முதல் வகையறா ஆட்கள். சமர்த்து ஜாதி. இவர்களை Legales என்று அழைக்கிறார்கள். அதாவது, சட்டப்படி உத்தமர்கள். இரண்டாவது வகையறா, Liberated என்னும் நாடோடிகள். பெரும்பாலும் இவர்கள் நாடு கடத்தப்பட்டவர்களாக இருப்பார்கள். ஸ்பெயின் தவிர்த்து, பிரான்ஸிலிருந்தும் இவர்களை அழைத்து வருவது வழக்கம். அடுத்து வருபவர்கள் Quemados. செயின் பறிப்பு, மணி பர்ஸ்

பறிப்பு தொடங்கி சிறுசிறு உதார் வேலைகள் செய்து, போலீஸால் சிறைப் பிடிக்கப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டவர்கள்.

கமாண்டோக்களுக்கு, திரைப்படங்களில் வருவது போல் யூனிஃபார்ம் எல்லாம் கிடையாது. சுற்றுலாப் பயணிகளைப்போல் ஸ்பெயின் வீதிகளில் சுற்றிக் கொண்டிருப்பார்கள். பெரும்பாலும் தனியாகவே வசிப்பார்கள், அபார்ட்மெண்ட்களில். அல்லது, ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் உள்ள ஏதாவதொரு வீட்டில். மனைவி, மச்சான், மச்சினியோடு ஒண்டுக்குடித்தனம் நடத்த விரும்புபவர்கள் இயக்கத்தில் இருக்க முடியாது.

குடும்பத்தாரோடு இவர்களுக்குப் பெரும்பாலும் உறவு இருக்காது. 'இனி யாரும் என்னைத் தேட வேண்டாம்' என்று துண்டுக் கடுதாசி எழுதி வைத்துவிட்டு வந்தவர்கள்தான் அதிகம். பரீட்சையில், காதலில் தோற்றுவிட்டு தாடி வளர்ப்பதற்குப் பதிலாக தீவிரவாதம் வளர்க்கக் கிளம்பியவர்களும் உண்டு.

கமாண்டோக்களின் பராமரிப்புச் செலவுகளுக்கு க்யூபுலா கணக்குப் பார்ப்பதில்லை. பில் இருந்தால்தான் பைசா என்று கழுத்தில் கத்தி வைப்பதில்லை. பீர், புடலங்காய், புது சொக்காய் எது வாங்கினாலும் ஃபைஸல் செய்துவிடுவார்கள். உயிரைக் கொடுத்து வேலை செய்கிறார்கள். உட்கார வைத்துக் கேள்வி கேட்க முடியுமா?

மாட்ரிட் முதல் குறுக்குச் சந்தில் இருக்கும் கமாண்டோவை மாட்ரிட் இருபதாவது குறுக்குச் சந்தில் உள்ள ஒரு ஷாப்பிங் காம்ப்ளக்ஸுக்குக் குண்டு வைக்கச் சொல்லி கட்டளை பிறப்பிப்பார்கள். சிவனே என்று கிளம்பிச் சென்று, வைத்துவிட்டு வந்துவிட வேண்டியதுதான். முதல் குறுக்குச் சந்தில் ஆள்கடத்தல் நிகழ்த்த வேண்டுமென்றால், பதினைந்தாவது குறுக்குச் சந்திலிருக்கும் ஆளை அழைப்பார்கள். குறிப்பிட்ட ஏரியாவில் உள்ள நபர் அந்த ஏரியா வேலையைப் பார்க்கமாட்டார்.

கிட்டத்தட்ட, வாரத்துக்கு இரண்டு முறை ஏதாவதொரு இடத்தில் குண்டு வைக்கச் சொல்லி உத்தரவு வரும். தெளிவாகப் படம் வரைந்து பாகங்கள் குறித்து அனுப்பி வைப்பார்கள். முன்பே பார்த்தபடி வெடி மருந்துகள் தனியே வந்து சேரும், சம்பந்தி வீட்டுக்குக் கைமுறுக்கு கொடுத்து அனுப்பும் கரிசனத்துடன். ஜாக்கிரதையாக, பராக்கு பார்க்காமல் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டு வா. வழியில், வாங்கிச் சாப்பிட இதை வைத்துக்கொள்.

பார்ப்பதற்கு, ஜவுளிக் கடை மஞ்சள் பை போலத்தான் இருக்கும். எடுத்துத் தோளில் சாய்த்துக்கொண்டு கிளம்பிவிட வேண்டியதுதான்.

கார் குண்டுகளைப் பயன்படுத்தும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட நபரின் புகைப்படம், கார் பதிவு எண் இரண்டும் கொடுத்துவிடப்படும். சேதாரத்தின் அளவுக்கு ஏற்ப வெடிகுண்டின் வீரியம் கூடும், குறையும்.

தகவல் தொடர்பு மெஸெஞ்சர்கள் மூலம். முழுநேர வேலை செய்பவர்களும் உண்டு. பார்ட் டைம் ஆசாமிகளும் உண்டு. பகுதி நேர ஆசாமிகளுக்கு அப்போதைக்கு அப்போது பைசா. ஒரு முறை உபயோகித்த நபரை, பெரும்பாலும் மீண்டும் உபயோகிக்க மாட்டார்கள். கல்லூரி மாணவர்கள் முதல் தாத்தா, பாட்டி வரை சகலவிதமானவர்களையும் உபயோகித்துக் கொள்வார்கள். யாருக்கு வேலை செய்கிறோம் என்ன வேலை செய்கிறோம் என்று அவர்களுக்குத் தெரியாது.

ஆள்கடத்தல் சர்வசாதாரணம். வரிப்பணத்தைத் தரவில்லை என்பதற்காக நடக்கும் ஆள்கடத்தல் ஒரு வகை. குண்டுக்கட்டாகத் தூக்கி வந்து, இரண்டு தட்டுத் தட்டி, சுட்டுவிரலைக் காட்டி எச்சரித்து அனுப்பிவிடுவார்கள். இரண்டாவது வகை, ஆட்களைக் கடத்தி வந்து, 'கேட்ட தொகையைத் தந்தால் திருப்பி அனுப்புகிறேன்' என்று மிரட்டுவது. பசையுள்ள நபர்களாகப்




பார்த்துத் தேர்வு செய்து துப்பாக்கி காட்டி வாயைப் பொத்துவார்கள். விடுவிப்பதற்காகக் கொடுக்கும் பெரும்தொகையுடன் சேர்த்து ரெகுலர் வரியையும் அவர்கள் இனி செலுத்த வேண்டியிருக்கும்.

ஆட்கள், ஆயுதம் இரண்டும் தங்குதடையில்லாமல் கிடைக்கும் என்ற உத்தரவாதம் கிடைத்த பிறகு, அடுத்த கட்ட வேலையில் இறங்கியது இ.டி.ஏ. தகுந்த இருப்பிடம் தேடவேண்டும். ஆட்களைத் தங்க வைப்பதில் பிரச்னை இல்லை. தனித்தனியே உதிரியாக அங்கொன்றும் இங்கொன்றுமாக அவர்கள் இருந்து கொள்ளலாம். தேவை ஏற்பட்டால் பொது இடத்தில் கூடலாம். பிரச்னை, ஆயுதங்களை எங்கே சேமித்து வைப்பது என்பதுதான்.

ஒரு குடோன் இருந்தால் தேவலை. ஆனால், நட்ட நடு நகரத்தில் எங்கு ஆரம்பிப்பது குடோனை? யார் தருவார்கள் இடம்? க்யூபுலா ஆட்கள் கூடிப் பேசினார்கள். ஒரு வீட்டை வாடகைக்குப் பிடிக்க வேண்டியது. பெயருக்கு இரண்டு அல்லது மூன்று பேர் தங்கிக்கொள்ள வேண்டியது. ஆயுதங்களை அப்படியே பதுக்கி வைத்துக் கொள்ளலாம்.

இந்த யோசனை உடனடியாக நிராகரிக்கப்பட்டது. காரணம், அதிலுள்ள ரிஸ்க் ஃபேக்டர். தினசரி நான்கு குண்டு வைக்கும் ஓர் இயக்கத்தை அரசாங்கமும் காவல்துறையும் சும்மா விட்டு வைக்குமா? சல்லடையாகச் சலிக்க மாட்டார்கள்? உளவு பார்க்க மாட்டார்கள்? வீடுகளில் பதுக்கி வைக்க வாய்ப்பே இல்லை. கண்டுபிடித்தால், ஆட்களும் காலி. ஆயுதங்களும் காலி. ஆட்களை விட ஆயுதங்கள் முக்கியம்.

அடுத்த யோசனை, தேவைப்படும் சமயங்களில் தேவைப்படும் ஆயுதங்களை பொட்டலம் கட்டி வாங்கிக்கொள்வது. ஸ்டாக் வைத்துக் கொள்ளும் சிரமம் இருக்காது. தீர்ந்து போகும்போது ஏஜெண்டுகளுக்கு ரிமைண்டர் அனுப்பி வாங்கிக் கொள்ளலாம்.

ஆனால், இந்த ஐடியாவும் ஏற்றுக்கொள்ளப்படவில்லை. காரணம், முந்தைய சந்தர்ப்பங்களில் பல ஏஜெண்டுகள் செய்த சொதப்பல்கள். 'இ.டி.ஏ. சமூகத்துக்கு, இயந்திரத் துப்பாக்கிகள் பத்து கேட்டிருந்தீர்கள். இப்போதைக்கு ஸ்டாக் இல்லை. அதற்கு ஈடாக, இத்துடன் பதினைந்து நாட்டுத் துப்பாக்கிகள் கொடுத்தனுப்பியுள்ளேன். அன்புடன் பொறுத்தருள வேண்டும், இவண், ஸோ அண்டு ஸோ.' இப்படி ஒரு முறையல்ல, இருமுறையல்ல பலமுறை காலை வாரி விட்டிருக்கிறார்கள்.

ம்ஹூம். இரண்டு வழிகளும் வேண்டாம் என்று ஒதுக்கி வைத்துவிட்டு, விவாதித்தார்கள். 'ஜூலோ' என்னும் திட்டம் பிறந்தது அப்போதுதான். Zulo என்றால் குழி. பாஸ்க் மொழி வார்த்தை. பள்ளம் என்ற அர்த்தம். பதுங்கு குழி என்றும் அழைக்கலாம். 'அமரர்' சதாம் ஒளிந்திருந்தாரே அப்படிப்பட்ட ஒரு குழி.

திட்டம் இதுதான். முதன்மை கமாண்டோக்கள் தவிர்த்து, அத்தனைபேரும் உடனடியாக காட்டுப் பகுதிகளுக்குச் செல்ல வேண்டும். துப்பாக்கிகளோடு அல்ல. கடப்பாரை, ஈட்டி, மண்வெட்டிகளோடு. ஆரவாரம் இல்லாத அமைதியான பகுதிகளைத் தேர்ந்தெடுத்து, குழி

வெட்டவேண்டும். தயார் ஆனதும் ஏஜெண்டுகளிடம் சொல்லி துப்பாக்கிகளை வாங்கிக் கொள்ள வேண்டும். பிறகு, துப்பாக்கிகளை உள்ளே தள்ளி மூடி, ஏதாவது அடையாளம் ஏற்படுத்திவிட்டுத் திரும்பிவிடவேண்டியது.

குழிகள் தோண்டிய இடங்களை, அந்தப் பிரதேசத்தின் வரைபடத்தில் குறித்துவிடவேண்டும். வருணனையுடன். இன்ன பகுதியில் இத்தனையாவது மரத்துக்குக் கீழே, இத்தனை அடி இடைவெளியில் ஒரு குழி உள்ளது. உள்ளே இத்தனை கைத்துப்பாக்கிகள், இத்தனை இயந்திரத் துப்பாக்கிகள். இத்யாதி.

இந்த வரைபடத்தை க்யூபுலாவுக்கு அனுப்பி வைக்க வேண்டும். க்யூபுலா அந்த வரைபடங்களைச் சேகரித்து எக்ஸ்க்ளூஸிவ் ஃபைல் ஒன்றைத் தயார் செய்யும். வேலை வரும்போது, ஆட்களிடம் வரைபடத்தின் பிரதி ஒன்றைக் கொடுப்பார்கள். தேவைப்படும் ஆயுதங்களைத் தோண்டி எடுத்துக் கொள்ளவேண்டும். கொஞ்சம் புராதனமான முறைதான். என்றாலும், இதுதான் சரியானது என்று க்யூபுலாவுக்குத் தோன்றியது.

வேலை உடனடியாக ஆரம்பிக்கப்பட்டது. கமாண்டோக்களைச் சிறு சிறு குழுக்களாகப் பிரித்து காட்டுப் பகுதிகளுக்கு அனுப்பினார்கள். நேஷனல் ஜியாகரஃபிக் சானலில் காட்டுவதைப் போன்ற காட்டுப்பகுதிகள் அல்ல அவை. சிங்கம், சிறுத்தை, யானை எல்லாம் ரோந்து போகாது. நகரத்தைவிட்டு வெகு தொலைவில் விலகி நிற்கும் உதவாக்கரைப் பகுதிகள் அவை. பெரும்பாலும் யாரும் அங்கே பிரவேசிக்க மாட்டார்கள். குடிகாரர்கள், சிறு திருடர்கள் அவ்வப்போது ஒதுங்கிக் கொள்ளும் இடம்.

வேண்டிய அளவுக்குக் குழிகள் தோண்டியாகிவிட்டது. அப்பாடா பிரச்னை தீர்ந்தது என்று நிமிர்ந்து உட்காருவதற்குள், கமாண்டோக்களிடமிருந்து ஒரு நீண்ட புகார் கடிதம். 'மாதத்துக்கு மூன்று பேரைக் கடத்தச் சொல்கிறீர்கள். உடனடியாக விடுவிப்பதாக இருந்தால் பரவாயில்லை. எங்கள் அபார்ட்மெண்ட்டிலேயே வாயைப் பொத்தி, கையைக் கட்டி, உட்கார வைத்துவிடுவோம். சிலரை, நீண்ட நாள்களுக்கு மறைத்து வைக்க வேண்டியுள்ளது. மக்கள் நடமாடும் பகுதிகளில் எத்தனை நாளைக்கு ஒருவரை மறைத்து வைக்க முடியும்? ஆகவே, தக்க முறையில் இதற்கொரு தீர்வு கண்டுபிடிக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, உங்கள் உண்மையுள்ள, கோயிஞ்சாமி.'

ஆயுதங்களுக்கு மட்டுமல்ல, ஆட்களுக்கும் மறைவிடம் தேவை. என்ன செய்வது? எப்படிச் செய்வது? மீண்டும் மீட்டிங். மீண்டும் விவாதம். இறுதியில், Safe Houses அமைப்பது என்று முடிவுசெய்தார்கள். காடு, மேடு, மலை, மறைவிடம் என்று ஸ்பெயின் முழுவதும் துழாவ வேண்டியது. சந்தடி அதிகம் இல்லாத இடமாகப் பார்த்து நிலத்தை வளைத்துப் போடவேண்டும். நல்ல நாள் பார்த்து ஒரு பெரிய சைஸ் தகர டப்பாவைக் கொண்டு சென்று கவிழ்க்க வேண்டியது. அல்லது வெறுமனே ஒரு துணிக் கூடாரம். அல்லது, பெரிய கட்டைகளைக் கொண்டு வந்து அடுக்கிவைத்துவிட்டு ஓரங்களில் ஆணி அடித்துவிடவேண்டியது. Safe Houses தயார்.

எப்போது வேண்டுமானாலும் அமைத்துக் கொள்ளலாம். தேவையில்லை என்றால், அப்படியே பெயர்த்து எடுத்துக் கொண்டு வந்துவிடலாம். பார்ப்பதற்கு மொபைல் டெலிபோன் பூத் போல் இருக்கும். இரண்டாம் உலகப்போர் காலகட்டத்தில், ஹிட்லரிடமிருந்து தப்பிக்க, யூதர்கள் பலர் Safe Houseகளைத்தான் அவசரஅவசரமாக வடிவமைத்தார்கள்.

எப்படி ஹிட்லரிடமிருந்து அவர்களால் தப்பிக்க முடியவில்லையோ, அதேமாதிரி இ.டி.ஏ.விடம் சிக்கியவர்களும் அத்தனை சுலபத்தில் தப்பிக்க முடியாது!